
## திராவிடத்தால் வாழ்கிறோம்

987

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

32

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘ரங்கோன் ராதா’; பழமைவாதத்துக்கும் பொதுநல வேட்கைக்குமான போராட்டம்!

மிகப்பெரிய மனிதர், தனவந்தர், ஊர்ப் பஞ்சாயத்துகளைத் தீர்த்து வைப்பவர். சிறந்த பக்திமான். கோட்டையூரார் என அழைக்கப் படும் ஒரு மனிதருக்குள் பணத்தாசையும், சொத்துக் குவிக்கும் வெறியும் அதோடு மாயம், மந்திரம், பில்லி, சூனியம் போன்ற மூட நம்பிக்கைகளும் குடியேறுவதால், அவர் மனிதப் பண்புகளை இழந்து, படிப்படியாக மிருகமாக மாறுவதை, ரங்கோன் ராதா கதையாக அண்ணா வடித்துக் கொடுத்திருப்பார்.

இன்றைக்குப் பார்க்கும்போது, ஏன் ரங்கோன் ராதா நாயகி இத்தனை அடிமையாக இருக்கிறார்? தவறு செய்பவர்களை இழுத்து வைத்து இரண்டு அறை விட்டால் என்ன? என்று நமக்குத் தோன்றுவதுடன், அப் பெண்ணின் அடிமைத்தனம் எரிச்சலூட்டு வதாகவும் இருக்கும். ஆனால், அந்த காலத்தை பிரதிபலிக்கும் கதையில், மூடத்தனத்தைத் தோலுரிக்கும் வேலையை கலைஞர் செய்திருந்தார்.

### நீங்க அவங்களா?

தங்கத்தைப் பெண் கேட்டு தர்மலிங்கம் முதலியார் வீட்டுக்கு சிலர் வருகின்றனர். இக்காட்சியில் தர்மலிங்கத்தைப் பற்றி மட்டுமல்ல, சுயமரியாதை இயக்கத்தவர்களையும் கலைஞர் நமக்கு அறிமுகம் செய்விப்பார். வந்த மூவரில் துண்டு போட்டவர் வணக்கம் வைத்து பேச்சைத் தொடங்குவார். அதற்கு தர்மலிங்கம் “ம்ம்... நமஸ்காரம், நமஸ்காரம். குந்துங்க, யார் நீங்கள்? எங்கே வந்தீங்க?” எனக் கேட்பார்.

**வந்தவர்:** நாங்க தஞ்சாவூர், இவரு செல்வநாயகம், பெரிய வியாபாரி

**தர்மலிங்கம்:** செல்வநாயகம்னு மொட்டையாச் சொன்னா? அவாளோட வர்ணாச்சாரம்?

**வந்தவர்:** நாங்க ஜாதி பேசுகிற பழக்கம் இல்லை என்று உரையாடல் நீளும்.

**தர்மலிங்கம்:** “பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் உள்ளது” என தட்டிக் கழிக்கையில், வந்தவர் விடாமல், “அதெல்லாம் நாங்க பார்க்கிறது இல்லங்க” என்பார். அதற்கு தர்மலிங்கம் “ஓகோ! நீங்க இந்த அவுங்களா? அப்போ, நீங்க வரும்போது வணக்கம்னு சொன்ன உடனேயே நான் தெரிஞ்சுக்கிட்டேன்” என்பார்.

அதாவது ‘நமஸ்காரம்’ என்பதை மறுத்து ‘வணக்கம்’ என்ற சொல்லை ஏற்றுப் பயன்படுத்துவது என்பது வெறும் சொல் அளவிலான மாற்றமல்ல! அதுவொரு கொள்கை ரீதியான வாழ்க்கை மாற்றமாகும் என்பதைக் கலைஞர் இக்காட்சிக்கு எழுதிய வசனத்தின் மூலம் தெளிவுபடுத்தி இருப்பார்.

மற்றொரு காட்சியில், காயகல்பம் செய்து தருவதாகச் சொல்லி, வீட்டுக்குள் வந்த மந்திரவாதி, துளசியைக் கொலை செய்து கொலைப்பழியை தர்மலிங்கத்தின் மீது சுமத்தி, கொள்ளையடிக்க முற்படும்போது ரங்கம் கட்டையால் மந்திரவாதியின் தலையில் அடித்துக் கொல்கிறாள். அக்காட்சியில்.... அய்யோ, அய்யோ நான் ஏமாந்து விட்டேன் எனப் புலம்பும் தர்மலிங்கத்திடம்,

“கொலைகாரன்! இன்று தானா நீங்கள் கொலைகாரன்? இத்தனை நாட்களாக நீங்கள் யார்? மந்திரத்தின் சக்தியால் மனைவியை நிரந்தரப் பைத்தியமாக மாற்றுவதற்குத் திட்டமிட்ட மகான்தானே? உங்கள் கயமை நிறைந்த உள்ளத்திற்கு இதோ கைமேல் பலன் கிடைத்துவிட்டது” என சாடுவாள் ரங்கம்.





படங்கள் உதவி: ஞானம்

### கடமை கண்ணியம் மறந்தவர்

படத்தின் இறுதிக் கட்டத்தில், தர்ம லிங்கத்தைப் பழிவாங்க உள்ளதாக அம்மா ரங்கத்திடம் கூறுவார் அவர் மகனான நாகசுந்தரம்.

**நாகசுந்தரம்:** அம்மா, உங்களை இவ்வளவு பாடுபடுத்திய அந்தப் பாதகர், அய்யோ... இதுவரையில் எனக்குத் தெரியாதே தாயே, பசுத்தோல் போர்த்திய புலி ஒன்றைத் தந்தையாகப் பெற்றிருக்கிறேன் என்கிற பயங்கர ரகசியம். மாதர் குல மாணிக்கமாம் என் அன்னையைச் சீரழித்த அந்த மாபாவியைப் பழிக்குப் பழி வாங்குகிறேன் என்பான்.

அதற்கு; ரங்கம் “நாகசுந்தரம், நான் சொல்வதைக் கேள், என்ன இருந்தாலும் அவர் உன் அப்பா” என்பார்.

**நாகசுந்தரம் :** அப்பா, மாதாவின் வாழ்க்கையை மண்ணாக்கியவர், மனித வடிவிலே உலவும் வனவிலங்கு ... இந்த சோக வரலாற்றுக்கு இப்போதே நல்ல முடிவு காண்பேன். இல்லையென்றால், அந்த முயற்சியிலேயே நானும் செத்து மடிவேன். காலம் மாறிவிட்டது தாயே. கடமை, கண்ணியம் இரண்டையும் மறந்துவிட்ட அந்தக் கயவருக்குப் புத்தி கற்பித்து விட்டு வருகிறேன். என்று சொல்லிப் போகிறான். அங்கு சென்று ராமலிங்கத்துடன் நடக்கும் உரையாடலில்தான், அவரது முதல் மனைவி ரங்கம் உயிருடன் உள்ள உண்மையைக் கூறுவான். அப்போது நடக்கும் வாதத்தில் நாகசுந்தரத்துக்கு அடுக்குமொழியில் வசனங்களை எழுதியிருப்பார் கலைஞர்.



> அறிஞர் அண்ணா எழுதிய குடும்பக் கதையும் அதற்கு கலைஞர் எழுதிய அற்புதமான வசனமும் ஒரு சிறந்த பகுத்தறிவுப் பாடமாக அமைந்தது.

**நாகசுந்தரம்:** விபரமாகவே கேட்டேன். ஆனால், சுருக்கமாகவே சொல்கிறேன். நான் சுருக்கமாகச் சொல்லப் போகும் இந்தச் சேதி சுழற்காற்றுத் துரும்பாக ஆக்கிவிடும் உங்களை. இரண்டே வரி லட்சோப லட்சம் ஈட்டிகளாகத் தைக்கும் உங்கள் இருதயத்தில். உடல், வியர்வைக் குளமாகும், உதிரம் உறைந்து விடும், உணர்ச்சிகள் மங்கிவிடும், உதடு உலரும், நா அசையாது. செவியும் விழியும் செயலிழக்கும் இந்தச் சேதி கேட்டால், செந்தேள் ஆயிரம் மண்டையிலே மாட்டியது போலத் துடிப்பீர், துவளுவீர், கதறுவீர், கலங்குவீர், உளறுவீர், புலம்புவீர்.

“துடியுங்கள். நன்றாகத் துடியுங்கள் ஊர் மெச்ச வாழ்ந்தவரே, தேள் பட்ட மான் போல என் அன்னையைத் துடிக்க விட்டீரே அதற்குப் பதிலுக்குப் பதில். பழிக்குப் பழி. பார்த்துப் பரவசப்படுகிறேன். துடியுங்கள். நன்றாகத் துடியுங்கள். பால்நிலவைப் பொழியும் சோலை என் தாய். அவர்களை கடும்பாறையாய், கற்பாறையாய் ஆக்கி விட்ட கொடியவரே துடியுங்கள். கொலைக்கு அஞ்சா கொடியவரே துடியுங்கள்” என உரையாடல் வீச்சாக இருக்கும்.

மிகப்பெரிய குற்றங்களைச் செய்து விட்டு, எவ்விதக் குற்றவுணர்வும் இன்றி, ஊர்ப் பெரிய மனிதராகவே வாழ்ந்து வரும் தர்மலிங்கத்தை முதல்முறையாக ஒரு மனிதன் அவரது குறைகளைச் சுட்டிக்காட்டி கேள்வி கேட்கிறான். அதுவும் அவரது மகனே கேட்கிறான்! கோபமும் அழுகையும் பீறிட, கட்டுப்படுத்த முடியாமல் தன் மகனைத் தாக்குகிறார். இது தந்தைக்கும் மகனுக்கும் இடையே நடக்கும் சண்டையாக, மோதலாகத் தெரிந்தாலும் இது உண்மையில் அநீதிக்கும் நீதிக்குமான போராட்டமாகும். போலித்தனமும், பத்தாம்பசலித்தனமும் சுயநலவெறியும் நிறைந்த பணக்காரப் பழமைவாதிக்கும் பொதுநலனில் வேட்கை கொண்ட, நீதியை நிலைநாட்டத் துடிக்கும், தவறு செய்தது தனது தந்தையே ஆனாலும் தண்டிக்கப் பட வேண்டும் என்ற நேர்மை உள்ளம்கொண்ட புதுமை விரும்பியான இளைஞனுக்கும் இடையிலான கொள்கை மோதல் என்பதைக் கலைஞர் தன்னுடைய கூர்மையான வசனத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

கலைஞரின் வசனமானது 1956-இல் தமிழ்நாட்டில் பெரும் நிலவுடைமையாளர்களாகவும் பண்ணையாளர்களாகவும் இருந்து பெரிய மனிதர்களாக மக்களால் ஏற்றுக் கொண்டாடப் பட்டவர்கள் மீதும் மிகக் கூர்மையான விமர்சனத்தை முன்வைப்பதைக் காண்கிறோம். ஆக, அறிஞர் அண்ணா எழுதிய குடும்பக் கதையும் அதற்கு கலைஞர் எழுதிய அற்புதமான வசனமும் ஒரு சிறந்த பகுத்தறிவுப் பாடமாக அமைந்தது.

...காட்சி விரியும்

---

## ஒடிசாவில் தலைதூக்கும் மதவாதம்!

ஒடிசாவின் கட்டாக் நகரம் மதச்சார்பின்மைக்குப் பெயர்பெற்றது. இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்தாலும், கடந்த 30 ஆண்டு களாகவே இஸ்லாமியப் பிரதிநிதி ஒருவரை சட்டமன்றத்துக்கு அனுப்பி வருகிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தற்போதைய சட்டமன்ற உறுப்பினரான சஃபியா ஃபிர்தௌஸும் இஸ்லாமியர். அங்கு துர்கா பூஜைகளில் பயன்படுத்தப்படும் கைவினைப் பொருட்களைத் தயாரிப்பதிலும் இஸ்லாமியர்கள் உள்ளனர். ‘ஜரி மேதா’ எனப்படும் அலங்காரப் பொருட்களைத் தயாரிப்பதிலும் இஸ்லாமியர்களே பெருமளவு ஈடுபடுகின்றனர். அதனால், இஸ்லாமியர்களின் பங்களிப்பு இல்லாமல், அங்கு இதுவரை துர்கா பூஜை முடிந்ததே இல்லை.

அந்த அளவுக்கு இருதரப்பு மக்களும் இணக்கமாக வாழும் நிலைமை தற்போது பா.ஜ.க. ஆட்சி அமைத்த ஓராண்டிலேயே மாறத் தொடங்கியுள்ளது. அங்கு கடந்த வாரம் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் தர்கா பஜார் வழியாக, ஐஞ்சிரிமங்கல பூஜை குழுவின் ஊர்வலம் சென்றுள்ளது. அப்போது ‘ஜெய் ஸ்ரீராம்’ முழக்கங்களை எழுப்பியும், பொதுமக்களை எரிச்சல் அடையச் செய்யும்விதமாக பாடல்களை ஒலிக்கச் செய்தும் உள்ளனர். இதனால், அப்பகுதி மக்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டு, கடைசியில் வன்முறையில் முடிந்துள்ளது. கட்டாக் வரலாற்றில் இதுவரை இல்லாத இந்த மத மோதல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வன்முறை வெடித்த மறுநாள் விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு கண்டனப் பேரணி நடத்துகிறது, பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கிறது. தேர்தல் பிரச்சார காலகட்டத்தில் இருந்தே ஒடிசாவில் மதவெறியை ஊட்டும் வேலைகளை இந்துத்துவா அமைப்புகள் செய்து வந்ததன் விளைவே, இப்போது வன்முறைக்கு இட்டுச் சென்றுள்ளது என்று அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

---

## ஃப்ளாஷ்பேக்



### தாயைப்போல காத்த தலைவர்!



பா.நடராசன்

1988-ஆம் ஆண்டு, எனது தம்பி பா.அன்பழகன் திருமணம், திருவாரூரில் நடைபெற்றது. திருமணத்துக்கு ஆறு மாதங்களுக்கு முன், எனது தாயார் காலமாகிவிட்டார். அந்தச் சூழ்நிலையில், கலைஞர் அவர்கள் திருமணத்துக்கு நேரில் வந்து, தாய்க்குத் தாயாக நின்று, மணமக்களை வாழ்த்தியது, எங்களுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியைத் தந்தது. அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கடிதம் கொடுத்த போது, கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, தனது உதவியாளரிடம் கொடுக்காமல், தனது சட்டைப்பையில் வைத்துக்கொண்டார். எனது வாழ்நாளில் மறக்க முடியாத தருணம் அது.

– பா.நடராசன், ஒன்றியச் செயலாளர், கொடுமுடி மேற்கு, ஈரோடு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## நினைவுக் குவியல்

ம.லூ.கு

### மறைந்த தலைவர் குடும்பத்துக்கு நிதி!

1960-ஆம் ஆண்டு, மே மாதம், ‘சண்டே அப்சர்வர்’ ஆசிரியரும், நீதிக் கட்சித் தலைவருமான பி.பால சுப்பிரமணியம் அவர்கள் குடும்ப நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘சந்திரமோகன்’ நாடகம், சென்னையில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா, நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி ஆகியோர் நடித்தனர். இந்த நாடகத்தின் மூலம் கிடைத்த 10 ஆயிரம் ரூபாய், மறைந்த தலைவர் பி.பாலசுப்பிரமணியம் குடும்பத்துக்கு வழங்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131